பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
19 09 2025 FRIDAY 6.30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கடல்சார் வணிகத்திற்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ஆபரேஷன் சிந்தூர், நமது பாதுகாப்புப்படைகளின் வலிமையை உலகிற்கு எடுத்துரைத்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. ஆசிரியர் தகுதி தேர்வு தொடர்பான உச்சநீதிமன்றம் தீர்ப்பு குறித்து ஆசிரியர்கள் அச்சப்படதேவையில்லை என்று மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

4. திருப்பத்தூர், வேலூர் உட்பட 6 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Suraj Vashisht காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

கடல்சார் வணிகத்திற்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக, மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் எழுதியுள்ள கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

கடல்சார் வணிகத்தை ஊக்குவிப்பதற்காக மத்திய அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை அமைச்சர் அந்த கட்டுரையில் விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

>>>>>><<<<<<

நமது பாதுகாப்புப்படைகளின் வலிமையை ஆபரேஷன் சிந்தூர் உலகிற்கு எடுத்துரைத்துள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

1965-ஆம் ஆண்டு பாகிஸ்தான் உடனான போரின் வெற்றி குறித்து புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இன்று கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

போரில் வெற்றிபெறுவது இந்தியாவிற்கு வழக்கமான ஒன்று என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்புப் படை வீரர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் அவர் கூறினார்.

நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த பாதுகாப்புப்படை வீரர்களின் குடும்பத்திற்கு மத்திய அரசு துணை நிற்கும் என்றும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நாடு முழுவதும் 30 Data மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு அடிப்படையிலான செயல்பாடுகளே இதற்கு காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தொழில்நுட்ப பயன்பாட்டிற்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களால் உற்பத்தித்துறையில் முன்னணியில் உள்ள தமிழகம் போன்ற மாநிலங்கள் கூடுதல் பயனடையும் என்று பிஜேபி மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சீர்திருத்தங்கள் மூலம் பெண்கள் அதிக அளவில் பயனடைவார்கள் என்று கூறினார்.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் விலை வெகுவாக குறையும் என்பதால், சேமிப்பு அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக அனைத்துத்தரப்பினரும் மகிழ்ச்சியடைந்திருப்பதாக திருமதி வானதி சீனிவாசன் கூறினார்.

>>>>>><<<<<<

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த வரி குறைப்பு நடவடிக்கைகள் மூலம் மோட்டார் வாகனங்களின் விலை குறையும் என்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று நாகையை சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

*(Voice Byte – பொதுமக்கள் - 50 Sec. )*

ஸ்டேஷ்னரி பொருட்களுக்கான வரி ரத்து செய்யப்பட்டிருப்பது தங்களது வணிகத்தை அதிகரிப்பதோடு பொதுமக்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்று காஞ்சிபுரத்தை சேர்ந்த ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(Sound Byte - கடை உரிமையாளர் - 33 Sec.)

>>>>>><<<<<<

ஆசிரியர் தகுதி தேர்வு தொடர்பான உச்சநீதிமன்ற தீர்ப்பு குறித்து ஆசிரியர்கள் அச்சப்படதேவையில்லை என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

இன்று மயிலாடுதுறையில் தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ், தூய்மைப்பணிகளை தொடங்கிவைத்த பின்னர், செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(Sound Byte –அன்பில் மகேஷ் - 33 Sec.)

>>>>>><<<<<<

திருப்பத்தூர், வேலூர் உட்பட 6 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(Sound Byte – செந்தாமரை கண்ணன் - 44 Sec.)

>>>>>><<<<<<

## மாவட்டச் செய்திகள்

நாமக்கல் மாவட்டத்தில் ஆட்சியர் திருமதி துர்காமூர்த்தி தலைமையில் சுகாதார பேரவைக்கூட்டம் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

>>>>>><<<<<<

தென்காசியில் கோ-ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு விற்பனையை ஆட்சியர் திரு கமல்கிஷோர் இன்று தொடங்கிவைத்தார்.

>>>>>><<<<<<

விழுப்புரம் மாவட்டத்தில் தூய்மை இந்தியா இயக்கத்தின்கீழ், மாவட்ட ஆட்சியர் திரு சேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் தூய்மைப்பணியாளர்கள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் கூடுதலாக 200 வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு இளம்பகவத் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

திருச்சி மாவட்டம் நாகமங்கலம் கிராமத்தில் மத்திய அரசின் மக்கள் தொடர்பு கள அலுவலகம் சார்பில் அரசு திட்டங்கள் குறித்த சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்த ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>>><<<<<<

## விளையாட்டுச் செய்திகள்

உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Suraj Vashisht காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

குரேஷியாவின் Zagreb-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 60 கிலோ எடைப்புரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் Moldova -வின் Victor Ciobanu -ஐ வென்றார்.

>>>>>><<<<<<

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 21-14, 21-14 என்ற செட் கணக்கில், சீனாவின் Ren Xiang Yu – Xie Haonan இணையை வென்றது.

>>>>>><<<<<<

சீனா பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Sukand Kadam அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*Naveen Sivakumar, Pramod Bhagad, Krishna Naagar* மற்றும் *Umesh Vikram Kumar* ஆகியோரும் காலிறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் *Pramod Bhagad - Sukand Kadam* இணையும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

*>>>>>>END<<<<<<*